நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆகியோர் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 8.7.2023 அன்று சாலை பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விபத்து இன்றி பணிபுரிந்த அவசர ஊர்தி ஓட்டுநர்கள், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், சிறப்பாக பணி புரிந்த காவல்துறை ஆய்வாளர்கள் உள்ளிட்ட 21 நபர்களுக்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள். உடன் அரசு அதிகாரிகள், மாநகராட்சி மேயர் மு. அன்பழகன், மாநகர காவல் ஆணையர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜித்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, பி.அப்துல் சமது உள்ளிட்ட அரசுத்துறை அலுவலர்கள் உள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம், முன்னாள் எம்.எல்.ஏ. நினைவில் வாழும் ஜே.எஸ்.ராஜூ இல்ல திருமண விழாவில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில நிர்வாகிகள் பா.துரைசாமி, இரா.ப.பரமேஷ்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

மயிலாப்பூர் சி.எஸ்.ஐ. மேல்நிலைப்பள்ளியில் 30 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு

இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள்!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூலை 11-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் 8.7.2023 அன்று சென்னை, மயிலாப்பூர் சி.எஸ்.ஐ. செவித்திறன் குறையுடையோருக்கான மேல்நிலைப் பள்ளியில் 30 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

கால்கள் பாதிக்கப்பட்ட 30 மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் வாயிலாக ரூ. 25,05,000/ (ஸ்கூட்டர் ஒன்றின் விலை ரூ.83,500/) மதிப்பிலான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் கமல் கிஷோர், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரக இணை இயக்குநர் திருமதி. ஜெயஷீலா மற்றும் தென் சென்னை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ். குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

பேராசிரியர். சுப.வீரபாண்டியன் தலைமை! புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞர் அணி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லப்பாண்டியன் !

முனைவர் கோவி .செழியன் - வழக்கறிஞர் அருள்மொழி - கோவி.லெனின் சிறப்புரை!

புதுக்கோட்டை, ஜூலை 11 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா கருத்தரங்கம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணிராஜன் தலைமையில் இன்று (11.07.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில் அறந்தாங்கி விக்னேஸ் வரபுரம் சந்தோஷ் திருமண மஹாலில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் இரா.தமிழ்ராசு, ஏ.முகமது ரபிக், கங்கை கவிக்குமார், பழ. இளையராஜா, எஸ்.அருண்குமார், என்.நசுருதீன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கருத்தரங்கிற்கு திராவிடர் இயக்க தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் தலைமை வகிக்கிறார். புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி கருத்தரங்கத்தை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

காலநிலை மாற்றம் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் சட்டமன்றங்களில் என்ற தலைப்பில் தமிழக அரசு கொறடா முனைவர் கோவி.செழியன், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் போராட்டங்களில் என்ற தலைப்பில் வழக்கறிஞர் அருள்மொழி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் கலை இலக்கிய உலகில் என்ற தலைப்பில் கோபி லெனின் ஆகியோரும் உரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்வுகளில் அறந்தாங்கி இரா.ராசன், பரணி இ.ஏ. கார்த்திகேயன், வழக்கறிஞர் சி.ராமநாதன், டாக்டர் ரகு அண்ணாமலை, அ.சுப்பிரமணியன், ஞான. இளங்கோவன், க.அடைக்கலம் ஸ்ரீதேவி அண்ணாதுரை, ஜெ.அபுதாஹிர், ஆர்.ஆர்.கே கலைமணி, இரா.ஆனந்த், எஸ். ஜெயராமன், உதயம் சண்முகம், பொன்.கணேசன், சக்தி ராமசாமி, வே. பொன்துரை, எஸ்.எம்.சீனியார், பொன். ராமலிங்கம், கே.பி. கே.டி.தங்கமணி, அ. அடைக்கலமணி, அ.முத்து, ஆறு.சிதம்பரம், அரு.வடிவேலு, எல்.குமார்,

கே.எஸ்.ரவி, ஆர்.கணேசன், வி.ஆர்.இளையராஜா, ஆ. செந்தில்குமார், அ.அழகப்பன், ஆ.பழனிக்குமார், கே. சி. சிவக்குமார், உமா தேவி காசிநாதன், மகேஸ்வரி சண்முகநாதன், வள்ளியம்மை தங்கமணி, சுதா அடைக்கலமணி. மேகலா முத்து, சுந்தரபாண்டியன், ரம்யா பாலு , கோ.சக்திவேல், ஹரி விமலாதி, பாத்திமா பீவி. சிவபால. இளங்கோ, மு.தேவி, மணி கண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் அறந்தாங்கி நகரச் செயலாளர் க.இராஜேந்திரன் நன்றி கூறுகிறார்.

திராவிட இயக்கச் சிந்தனையாளர்
நிலவு பூ கணேசன்
அவர்களின் 38ம் ஆண்டு நினைவேந்தல்

திராவிட இலட்சியப் பாதையில்
தங்களின் அடிச்சுவட்டில்...
என்றென்றும் பயணிக்கிறோம்!

பாசம் மறவாத மகன்
வழக்கறிஞர் க.செல்வமணி B.ஏஸ்சி., பி.எல்.,
மேனாள் உறுப்பினர் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
மூத்த உறுப்பினர் - தி.மு.க. வழக்கறிஞர் அணி
நிறுவனர் - விழுதுகள் நண்பர்கள் கூட்டமைப்பு

எண்: K4, தாமரை குடியிருப்பு, முதல்தெரு
நந்தனம், சென்னை - 600 035
அலைபேசி : 99948 77798 / 63811 74091

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் அரசு மருத்துவமனையில் ரூ.3.78 கோடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சி.டி.ஸ்கேன் மற்றும் சிஆர்ம் உடன் எலும்பு முறிவு சிகிச்சை மேசை உள்ளிட்ட 4 கட்டிடங்களை மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.கி.சாந்தி, தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்பிரமணி, அரூர் பேரூர்ச் செயலாளர் முல்லை ரவி, மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா

கோவை மாநகர் மாவட்டத்தில் பொதுக்கூட்டம்! வாகை சந்திரசேகர் சிறப்புரை!

அமைச்சர் சு.முத்துசாமி - நா.கார்த்திக் பங்கேற்பு!

கோவை, ஜூலை 11-

முத்தமிழறிஞர் செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் பீளமேடு பகுதி கழகம் 2 செயலாளர் மா.நாகராஜ் தலைமையில் 28 வது வட்டக் கழகச் செயலாளர் ப.மோகன்ராஜ் வரவேற்புரையில் இன்று (11.7.2023 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.30 மணியளவில் கோவை ஆவாரம்பாளையம் ரெட் ரோஸ் மைதானத்தில் நடைபெறுகிறது.

கோவை மாநகர் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அவைத்தலைவர் கணபதி ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாவட்ட பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன் பகுதிக் கழக நிர்வாகிகள் பா.மா.கிருஷ்ணமூர்த்தி, வ.விஜய், இரா.நாகராஜ், ப.சுஜாதா, ஆவை ஆர். சதிஷ்குமார், கேபிள் ராஜேந்திரன், கே.என். ராஜேந்திரன், வட்டச் செயலாளர்கள் மு.சசிகுமார், ஜெபமாலை தாஸ், மாமன்ற உறுப்பினர் எ. அன்னக்கொடி, எத்திராஜ், மு.ஈஸ்வரமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்ரமணியன், டி.எஸ்.பி.கண்ணப்பன், பி.ஆனந்தகுமார், கழக சொத்து பாதுகாப்பு குழு துணை தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்தகுமார், மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எம்.தண்டபாணி, மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் பி.ஆர். அருள்மொழி, மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் கோகுல் கிருபா சங்கர், மாநில தகவல் தொழிநுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மறை, மாநில தீர்மானகுழு உறுப்பினர் மு.ரா.செல்வராஜ், மாநில விளையாட்டு மேம்பாடு அணி துணை செயலாளர் பைந்தமிழ் பாரி, மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் நா. முருகவேல், மாநில இலக்கிய அணி துணை செயலாளர் அ.திராவிடமணி, மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் விஷ்ணுபிரபு, மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மீனாஜெயகுமார், மாநில தொழிலாளர் அணி துணை செயலாளர் எல்.பி.எப். தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட பிரதிநிதி கேபிள் சேகர் நன்றியுரை கூறுகிறார்.

தமிழ்நாடு இயல்,இசை, நாடக மன்ற தலைவர், மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவைத் தலைவர் வாகை சந்திர சேகர், தமிழ்நாடு வீட்டு வசதிமற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, கோவை மாநகர் மாவட்ட க் கழகச் செயலாளர் நா.கார்த்திக் எக்ஸ் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர், மண்டல தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.